# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

## 2003 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, இறப்பர் ஆராய்ச்சி (திருத்தச்) சட்டம்

---

(2003 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 09 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது

---

2003, செத்தெம்பர் மாதம் 12 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

விலை: ரூ. 1. அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

# 2003 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க இறப்பர் ஆராய்ச்சி (திருத்தச்) சட்டம்

[2003 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 09 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

L.D.—O. 35/2000
4586

## இறப்பர் ஆராய்ச்சிக் கட்டளைச் சட்டத்தினைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டமானது, 2003 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, இறப்பர் ஆராய்ச்சி (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம். சுருக்கப் பெயர்.

2. 1987 ஆம் ஆண்டின் 39 ஆம் இலக்க, சட்டத்தினால் இறுதியாக திருத்தப்பட்டவாறான (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) இறப்பர் ஆராய்ச்சிக் கட்டளைச் சட்டத்தின் 3 ஆம் பிரிவானது இத்தால் மேலும் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :— 439 ஆம் அத்தியாயத்தின் 3 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவினை இடுவதன் மூலமும் :—

"(1) சபையானது —

(அ) பின்வரும் பதவிவழி உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும் :—

(i) இறப்பர் ஆராய்ச்சி நிறுவகத்தின் பணிப்பாளராக அப்போதைக்கு பதவி வகிக்கின்ற ஆள் ;

(ii) இறப்பர் அபிவிருத்தித் திணைக்களத்தில் பணிப்பாளர் தலைமையதிபதியாக அப்போதைக்கு பதவிவகிக்கின்ற ஆள் ;

(iii) இலங்கைப் பயிரிடுநர் கழகத்தின் தவிசாளராக அப்போதைக்குப் பதவிவகிக்கின்ற ஆள் ; அத்துடன்

(ஆ) பெயர்குறித்து நியமிக்கப்பட்ட பின்வரும் உறுப்பினர்கள் :

(i) அத்தகைய அமைச்சரினால் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட, பெருந் தோட்டக் கைத்தொழில் என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுப் பிரதிநிதி ஒருவர் ;

(ii) அத்தகைய அமைச்சரினால் பெயர் குறித்து, நியமிக்கப்பட்ட, நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுப் பிரதிநிதி ஒருவர் ;

(iii) பெருந்தோட்டக் கம்பனிகளை பிரதிநிதித்துவம் செய்கின்ற ஆட்களுக்கிடையே இருந்து இலங்கை பயிரிடுநர் கழகத்தினால் பெயர்குறித்து நியமிக்கப்படும் பிரதிநிதிகள் இருவர் ;

(iv) கமத்தொழில் அறிவியல்துறையில் புகழ்பெற்றிருக்கின்ற ஆட்களுக்கிடையிலிருந்து கம ஆராய்ச்சி கொள்கைக்கான பேரவையினால் பெயர்குறித்து நியமிக்கப்படும் ஆள் ஒருவர் ;

(v) இறப்பர் சிறுபற்றுநில சொந்தக்காரர்களைப் பிரதிநிதித்துவம் செய்கின்ற ஆட்களுக்கிடையே இருந்து அமைச்சரினால் பெயர் குறித்து நியமிக்கப்படும் பிரதிநிதிகள் இருவர் ;

(vi) அமைச்சரினால் பெயர்குறித்து நியமிக்கப்படும் கொழும்பு இறப்பர் வியாபாரிகள் சங்கத்தின் பிரதிநிதி ஒருவர் ;

(vii) அமைச்சரினால் பெயர்குறித்து நியமிக்கப்படும் இறப்பர் உற்பத்தியாளர்கள் சங்கத்தின் பிரதிநிதி ஒருவர் ;

(viii) பெருந்தோட்டக் கைத்தொழில் எனும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரினால் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட ஆள் ஒருவர் ;

(ix) அமைச்சரால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட தொழிற்சங்கங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் இரு உறுப்பினர்கள்.

இப்பந்தியின் நோக்கங்களுக்காக "தொழிற்சங்கம்" என்பது தொழிற்சங்கக் கட்டளைச் சட்டத்தில் (அத்தியாயம் 138) உள்ளவாறான அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்.".

(2) அப்பிரிவின் 2 ஆம் உட்பிரிவில் "நியமிக்கப்பட்ட உறுப்பினர்" என்ற சொற்களுக்குப் பதிலாக, "பெயர்குறித்து நியமிக்கப்பட்ட உறுப்பினர்" என்ற சொற்களைப் பிரதியிடுவதன் மூலமும் ;

(3) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவினை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவினை பதிலீடு செய்வதன் மூலமும் :—

"(3) பெயர்குறித்து நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவர் சுகவீனம் காரணமாக, உடல் இயலாமை காரணமாக அல்லது மூன்று மாதங்களுக்குக் குறையாதவொரு காலப்பகுதிக்கு இலங்கையில் இல்லாமை காரணமாக அவரது கடமைகளைப் புரிவதற்கு தற்காலிகமாக இயலாதவராகவிருக்கின்றவிடத்து, அமைச்சரானவர் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் ஏற்பாடுகளைக் கருத்தில் கொண்டு, அத்தகைய காலப்பகுதிக்கு அவருடைய இடத்தில் செயலாற்றுவதற்கென வேறோர் ஆளை நியமிக்கலாம்.";

(4) அப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவில், "நியமிக்கப்பட்ட உறுப்பினரொருவர்" என்ற சொற்களுக்குப் பதிலாக, "பெயர்குறித்து நியமிக்கப்பட்ட உறுப்பினரொருவர்" என்ற சொற்களைப் பதிலீடு செய்வதன் மூலமும் ;

(5) அப்பிரிவின் (5) ஆம் உட்பிரிவில் "நியமிக்கப்பட்ட உறுப்பினர்" என்ற சொற்களுக்குப் பதிலாக, "பெயர்குறித்து நியமிக்கப்பட்ட உறுப்பினர்" என்ற சொற்களைப் பதிலீடு செய்வதன் மூலமும் ;

(6) அப்பிரிவின் (6) ஆம் உட்பிரிவினை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் உட்பிரிவினைப் பதிலீடு செய்வதன் மூலமும் :—

"(6) சபையின் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட உறுப்பினர் எவரும் இறப்பினால், பதவி துறப்பினால் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுவதினால் அல்லது வேறு காரணத்துக்காக பதவியை வறிதாக்குமிடத்து, அமைச்சர், (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் ஏற்பாடுகளைக் கருத்திற் கொண்டு, அத்தகைய உறுப்பினரை அடுத்துறுவதற்கு எவரேனும் ஆளை நியமிக்கலாம். அத்தகைய பெயர்குறித்துநியமிக்கப்பட்ட உறுப்பினரின் இடத்தில் நியமிக்கப்பட்ட ஆள் எவரும், அவர் எவ்வுறுப்பினரை அடுத்துறுகின்றாரோ அவ்வுறுப்பினரது பதவிக்காலத்தின் முடிவுறாதெஞ்சியுள்ள காலப் பகுதிக்குப் பதவி வகித்தல் வேண்டும்." ;

(7) அப்பிரிவின் (9) ஆம் உட்பிரிவில் "நியமிக்கப்பட்ட உறுப்பினர்" என்ற சொற்களுக்குப் பதிலாக, "பெயர்குறித்து நியமிக்கப்பட்ட உறுப்பினர்" என்ற சொற்களைப் பதிலீடு செய்வதன் மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் பிரிவு 3அ வினைத் திருத்துதல்.

**3.** 1987 ஆம் ஆண்டு 39 ஆம் இலக்க, சட்டத்தினால் உட்புகுத்தப்பட்ட முதன்மைச் சட்டவாக்கத்தின் பிரிவு 3(அ) ஆனது அப்பிரிவின் (1) ஆம், (2) ஆம் உட்பிரிவுகளினை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் உட்பிரிவுகளைப் பதிலீடு செய்வதன் மூலமும் இத்தால் திருத்தப்படுகின்றது.

(1) அமைச்சர், சபையின் உறுப்பினர்களில் ஒருவரை சபையின் தவிசாளராக நியமித்தல் வேண்டும்.

(2) (3) ஆம், (4) ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகளுக்கு அமைவாக, தவிசாளரின் பதவிக்காலம் அவரது உறுப்பாண்மைக் காலப்பகுதியாகவிருத்தல் வேண்டும் :

ஆயின், எவ்வாறாயினும், தவிசாளர் சபையின் உறுப்பினர் ஒருவராக பதவிக்காலம் முடிவடையு முன்னர் தவிசாளராக பதவி வகிக்காதொழியுமிடத்து, அமைச்சரானவர், சபையின் வேறோர் உறுப்பினரை தவிசாளராக நியமிக்கலாமென்பதுடன் அத்தகைய உறுப்பினர் தவிசாளர் பதவியை முன்னராகவே வறிதாக்கினாலன்றி, அவர் எத்தவிசாளரை அடுத்துறுகின்றாரோ அந்தத் தவிசாளரின் பதவிக்காலத்தில் முடிவுறாதெஞ்சியுள்ள காலப்பகுதிக்கு தவிசாளராகப் பதவி வகித்தல் வேண்டும்.".

4. இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முந்திய நாளன்று சபையின் உறுப்பினரொருவராகப் பதவிவகிக்கின்ற ஆளொவ்வொருவரும், முதன்மைச் சட்டவாக்கத்தின் 3 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளின் பயனைக்கொண்டு, முதன்மைச் சட்டவாக்கத்தில் உள்ளது எது எப்படியிருப்பினும் இச்சட்டம் தொடங்கும் தேதியன்று பதவியை வகிக்காதொழிதல் வேண்டும்.

இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு முந்திய நாளன்று பதவி வகிக்கும் சபையின் உறுப்பினர்கள், இச்சட்டம் தொடங்கும் தேதியன்று அத்தகைய பதவியை வகிக்கா தொழிதல்.

5. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387; (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், இல.32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ் ரோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.